**செய்தி வெளியீடு எண்:535** **நாள்:18.11.2016**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணயத்தால் தொகுதி–I பணிகளான துணை ஆட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர், உதவி ஆணையர் (வணிகவரி), மாவட்ட பதிவாளர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் அலுவலர் ஆகிய 85 பணிக்காலியிடங்களுக்கு முதனிலைத்தேர்வு வருகிற 19.02.2017 அன்று நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்களில் இத்தேர்வுக்கு தேவையான புத்தகங்கள் மற்றும் பாடக்குறிப்புகள் பராமரிக்கப்படுகின்றன. இத்தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்பு அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் துவங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் பாடவாரியான வகுப்புகள், மாதிரித் தேர்வுகள் நடத்தப்பெறும். பாடக்குறிப்புகளும் வழங்கப்படும். எனவே இப்போட்டித் தேர்விற்கு தயாராகும் இளைஞர்கள் தங்களது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட செய்திக்குறிப்பை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் டாக்டர். என். சுப்பையன் இ.ஆ.ப., அவர்கள்17.11.2016 அன்று வெளியிட்டுள்ளார்கள்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை,
கிண்டி, சென்னை–32.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**